# एनट्रस्ट इनफोटेक ने दूसरे नॉलेज सेंटर का उद्घाटन किया

चेन्नई, 26 जुलाई। सोलूशन रियल स्टेट उद्योगों को आईटी उपलब्ध कराने वाली कंपनी एनट्रस्ट इनफोटेक प्राइवेट लिमिटेड ने बुधवार को यहां अपने दूसरे नॉलेज सेंटर का उद्घाटन किया। जिसका मुख्यालय चेन्नई स्थित राधाकृष्णन सालै पर रहेगा। इस मौके पर संवाददाता सम्मेलन को संबोधित करते हुए कंपनी के अध्यक्ष व सीईओ श्रीकांत रामचंद्रन ने बताया कि कंपनी की स्थापना वर्ष 2003 में हुई थी। पिछले वित्तीय वर्ष में कंपनी ने करीब 12 मिलियन डालर का कारोबार किया था जिसे काफी प्रभावी माना जा रहा है। कंपनी ने अपने राजस्व को दुगना करने के लिए वर्ष 2008 तक के लिए प्रभावी योजनाएं बनाई हैं। उन्होंने बताया कि कंपनी बिजनेस में मानव श्रम की बढ़ती लागत के कारण व्यापक विकास देख रही है। इसके अलावा आउट सोर्स की भी महत्वा बढ़ रही है।

# என்டிரஸ்ட் இன்' ''டெக்-ன்
# 2-வது தகவல் மையம் சென்னையில்

**NTrust**

ரியல் எஸ்டேட் தொழிலுக்கு முழுமையான தகவல் தொழில் நுட்ப தீர்வுகள் மற்றும் கேபிஒ சேவை அளித்து வரும் என்டிரஸ்ட் இன்போடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் இன்று சென்னையில தனது இரண்டாவது தகவல் மையத்தை தொடங்கியுள்ளது. நடப்பு நிதியாண்டுக்



குள் தனது ஊழியர்கள் எண்ணிக்கையை 400 ஆக உயர்த்தவும் திட்டமிட்டுள்ளது.

சென்னை தலைமையிடமாக கொண்ட இந்நிறுவனத்துக்கு அமெரிக்காவின் சிஏ மாகாணம் செரிடாசில் ஆன்சைட் அலுவலகம் உள்ளது.

தொடக்க விழாவில என்டிரஸ்ட் இன்போடெக் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியும் தலைவருமான ஸ்ரீகாந்த் ராமச்சந்திரன் பேசும் போது, 'ரியல் எஸ்டேட் லீசிங் ிர்வாக தொழிலில் அவுட்சோர்சிங் என்பது இப்போது தான் தொடங்கப்பட்டுள்ளது. இந்த துறை அபார வளர்ச்சியடைய உள்ளது. மனித ஆற்றலுக்கு கொடுக்க வேண்டிய விலை உயர்ந்து கொண்டே வருகிறது. திறமையான ஆட்களுக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளது. பெருகி வரும் சந்தையை பிடிக்கும் விதத்தில் ரீப் மற்றும் லீப் என்ற இரண்டு வலுவானமென் பொருளை நாங்கள் உருவாக்கியுள்ளோம்' என்றார்.

எமது லீப் சேவைக்கு கிடைத்த அமோக வரவேற்பு இரண்டாவது மையம் தொடங்குவதற்கான தேவையை உருவாக்கியது. இதனால் சுமார் 200 பேருக்கு பணியில சேர்க்க உள்ளதாக தலைமை அதிகாரி ஜானகிராமன் தெரிவித்தார்

# என்டிரஸ்ட் சாப்ட்வேர் சென்னையில் 2வது மையம்

சென்னை, ஜூலை 27: ரியல் எஸ்டேட் துறைக்குத் தேவையான சாப்ட்வேர் தீர்வு களை அளிக்கும் என்டிரஸ்ட் சாப்ட்வேர் நிறுவனம், சென்னையில் புதிய மையத்தைத் தொடங்கியுள்ளது.

இதுகுறித்து இந்நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீகாந்த் ராமச்சந்திரன் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ஜானகிராம் ராமச்சந்திரன் ஆகியோர் சென்னையில் நிருபர்களிடம் நேற்று கூறியதாவது:

என்டிரஸ்ட் சாப்ட்வேர் நிறுவனம், அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளில் உள்ள ரியல் எஸ்டேட் துறையின் வாடகைக் கணக்குகளுக்கான சாப்ட்வேர் சேவைகளை அளிக்கிறது.

ரியல் எஸ்டேட் லீசிங் துறைக்காக ரீப் மற்றும் லீப் என்ற இரண்டு சாப்ட்வேர்களை உருவாக்கியுள்ளோம். சென்னையில் ஏற்கனவே ஒரு சாப்ட்வேர் மேம்பாட்டு மையம் செயல்படுகிறது.

தற்போது சென்னையிலேயே இரண்டாவது மையம் துவங்கப்பட்டுள்ளது. இதில் 160 பேர் பணியாற்றுவார்கள். ஆகஸ்ட்டில் இருந்து புதிய மையம் இயங்கும்.



என்டிரஸ்ட் சாப்ட்வேர் நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீகாந்த் ராமச்சந்திரன், தலைமைச் செயல் அதிகாரி ஜானகிராம் ராமச்சந்திரன்.